ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2360/21 - 2023 නොවැම්බර් මස 27 වැනි සඳුදා - 2023.11.27

*2360/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 6/2023*

**(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம்**

(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (6) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 80 ஆம் பிரிவின்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ (சனாதிபதி சட்டத்தரணி),
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023*, நவெம்பர் *23*.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2023 ஆம் ஆண்டின் நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (நீதிமன்ற காண்பி பொருட்களை கையுதிர்த்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இயைபான நீதவான் நீதிமன்றத்தின் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் பதிவாளரானவர், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, பின்வருவனவற்றை உள்ளடக்கி மாதாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் வேண்டும் :-

(அ) எந்த வழக்குகள் தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை பெறப்படுகின்றதோ அந்த வழக்குகள் ;

1A - G 40866 — 26 (2023/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) எந்த வழக்குகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, அரசாங்க பகுப்பாய்வாளரின் அறிக்கை பெறப்படாதுள்ள வழக்குகள் ;

(இ) எந்த வழக்குகள் தொடர்பில் (இதனகத்துப் பின்னர் ''கையுதிர்த்தல் கட்டளை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை கையுதிர்ப்பதற்கான எவையேனும் கட்டளை ''இதனகத்துப் பின்னர் ''அதிகாரமளிக்கப்பட்ட ஆள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொலிசுப் போதைப் பொருள் பணியகம் அல்லது இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நாடிச்சென்றுள்ளனரோ அந்த வழக்குகள் ;

(ஈ) எந்த வழக்குகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, ஏதேனும் கையுதிர்த்தல் கட்டளையை பொலிசுப் போதைப் பொருள் பணியகம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நாடிச்சென்றுள்ளனரோ அந்த வழக்குகள் ;

(உ) எந்த வழக்குகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் நியதிகளின்படி விடயத்துக்கேற்ப, இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் கையுதிர்த்தல் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளனவோ அந்த வழக்குகள் ;

(ஊ) எந்த வழக்குகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தி மற்றும் அதற்கான காரணங்கள் விடயத்துக்கேற்ப, இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் கையுதிர்த்தல் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளனவோ அந்த வழக்குகள் ;

(எ) எந்த வழக்குகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் வழங்கப்பட்ட கையுதிர்த்தல் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றதோ அந்த வழக்குகள் ;

(ஏ) எந்த வழக்குகள் தொடர்பில் கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் கையுதிர்த்தல் கட்டளைகள் நிறைவேற்றப்படாதிருக்கின்றனவோ அந்த வழக்குகள் ; அத்துடன்

(ஐ) எந்த வழக்குகள் தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக பதிவாளர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி தேவைப்படுத்தக்கூடிய வேறு எவையேனும் தகவல்கள்.

3. இயைபான நீதிமன்றத்தின் பதிவாளரானவர், ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது கிழமையினுள் இயைபான நீதிவானுக்கு அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதிக்கு ஒழுங்குவிதி 2 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மாதாந்த அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. (1) இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியானவர், அத்தகைய மாதாந்த அறிக்கை கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஏழு நாட்கள் எனும் காலப்பகுதியொன்றினுள் அது தொடர்பில் தோதான கட்டளைகளை ஆக்குதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் (இதனகத்துப் பின்னர் ''தயாரிப்பு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் அவுடதம், பதார்த்தம், பொருள் அல்லது தயாரிப்பு என்பவற்றை அழிப்பதற்கான ஏதேனும் கட்டளை, முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கையுதிர்த்தலுக்கான குறித்துரைப்புகளுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்.

5. ஆறாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி, இக்கட்டளைச் சட்டத்தின் 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, ஏதேனும் காண்பி பொருளை அழிப்பதற்கான கட்டளையொன்றை பின்வருவன திருப்தியடைந்ததன் பின்னர் ஆக்குதல் வேண்டும் :-

(அ) பின்வருவோரால் ஏதேனும் அத்தகைய காண்பி பொருளை அழித்தலுக்கான ஏதேனும் ஆட்சேபனை கவனத்துட் கொள்ளப்பட்டுள்ளது அல்லது அத்தகைய எவரேனும் ஆளினால் ஆட்சேபனை எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் அக்கட்டளையானது நீதியின் நோக்கங்களுக்கு முரணாகவராதிருக்கும் –

(i) குற்றவழக்குத் தொடுக்கும் வழக்குரைஞர் அல்லது குற்றவழக்கினைத் தொடுக்கின்ற பொலிசு அலுவலர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) எதிர்தரப்பு வழக்குரைஞர் அல்லது அவரது பிரதிநிதி ; அல்லது

(iii) சந்தேக நபர்.

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகியிருக்கின்ற காண்பி பொருட்களின் பொதிகள் மற்றும் இலச்சினைகள் உட்பட புகைப்படங்கள் மற்றும் அவசியமான சான்றுகள் ;

(இ) அத்தகைய நீதிமன்றத்தின் வழக்கு நடவடிக்கைகளின்போது சான்றாக முன்வைக்கப்படுகின்றவற்றை இயலச் செய்கின்ற வகையிலான பேணிக்காக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட காண்பி பொருள் தொடர்பிலான பொதிகள் மற்றும் இலச்சினைகள் உட்பட அவசியமான சான்று.

6. இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியானவர், பரிசோதனைக்காக அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு காண்பி பொருளைச் சமர்ப்பித்திருக்கின்றவரான சட்டத்துறை தலைமையதிபதி மற்றும் இயைபான பொலிசு அலுவலரிடமிருந்து அவதானிப்புக்கள் பெறப்பட்டதன் பின்னர், அவசியமேற்படின், ஏதேனும் விசாரணை, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மருத்துவ அவுடதங்கள் தயாரிப்புக்காக அழிக்கப்படல் வேண்டுமென கட்டளையிடப்பட்ட அத்தகைய காண்பி பொருளின் தோதான அளவினை வெளிவிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதியின் நியதிகளின்படி அத்தகை காண்பி பொருளின் நிறையானது -

(அ) ஏதேனும் விசாரணை, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மருத்துவ அவுடதங்கள் தயாரிப்புக்குத் தேவையான நிறையினை விஞ்சுகின்ற ஏதேனும் சந்தர்ப்பமாகவிருத்தலாகாது ; அத்துடன்

(ஆ) அதன் சார்பில் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் பெறப்படக்கூடிய மற்றும் உடைமைகொள்ளக்கூடிய அவுடதம், பதார்த்தம், பொருள் அல்லது தயாரிப்பொன்றாகவிருத்தல் வேண்டும்.

ஆயின் மேலும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உரிமமொன்றின் அங்கீகாரத்தின்கீழ் பெறப்பட முடியாத அல்லது உடைமைகொள்ள முடியாத ஏதேனும் காண்பிப்புப் பொருளானது, விசாரணை, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக அத்தகைய காண்பி பொருளை வெளிவிட்டிருக்கின்ற இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் வழங்கப்பட்ட தோதான நிபந்தனைகளுக்கிணங்க மாத்திரமே வெளிவிடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. விடயத்துக்கேற்ப பொலிசுப் போதைப் பொருள் பணியகம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், இயைபான நீதிவான் அல்லது இயைபான நீதிமன்றத்தின் நீதிபதியின் விடயத்திற்கேற்ப மேற்பார்வையின்கீழ் அத்தகைய காண்பி பொருளை அழித்தல் அல்லது அழிக்கப்படுவதற்கு செய்வித்தல் வேண்டுமென்பதுடன் விடயத்துக்கேற்ப அத்தகைய அழித்தலை அத்தகைய நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

8. காண்பி பொருளை வெளிவிடுவதற்கு அல்லது காண்பி பொருளை அல்லது அதன் ஏதேனும் பாகத்தினை அழிப்பதற்கு நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி கட்டளையொன்றினை ஆக்குவதன்மேல், பொலிஸ் போதைப் பொருள் பணியகம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளானவர் -

(அ) 77அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) எனும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியிடமிருந்து பொருத்தமான திகதி மற்றும் நேரம் என்பவற்றை நாடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அழிக்கப்படுதல் பகுதியில் சமுகமாயிருப்பதற்கு அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அறிவித்தல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், ஏதேனும் வடிவிலான அவுடதம், பதார்த்தம், பொருள் அல்லது மோர்பின், ஹெரோயின், கொக்கெய்ன், மீதாம்பேட்டமைன் மற்றும் கஞ்சா போன்றவற்றின் தயாரிப்பு அத்துடன் தாவர அடிப்படையிலான அவுடதங்கள், அல்லது ஏதேனும் வடிவிலான அவுடதம், பதார்த்தம், பொருள் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் II ஆம் அட்டவணையின் பகுதி I மற்றும் II இல் குறித்துரைக்கப்பட்ட வேறு செயற்கையான அல்லது பகுதியளவு செயற்கையான அபாயகரமான அவுடதங்களின் தயாரிப்பினைக் கையுதிர்த்தல் வழக்குகளின் கையுதிர்த்தல் நிறையானது 1000கி இனை விஞ்சுகின்றவிடத்து, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அச்சபையின் அலுவலரொருவர் அழித்தல் பகுதியில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

(இ) (அவசியமேற்படின்) அத்தகைய காண்பி பொருளின் அவசியமான பாதுகாப்பு மற்றும் இடப்பெயர்வு என்பன ஒழுங்கேற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துதல் ;

(ஈ) காண்பி பொருட்களின் பொருட்பதிவேட்டின் துல்லியத்தினை சான்றுறுதிப்படுத்துதல் ;

(உ) பொதிகள் மற்றும் இலச்சினைகள் அத்துடன் ஏனைய சான்றுகளின் அவசியமான புகைப்படங்களை எடுத்தல் மற்றும் நீதிமன்ற காண்பிப்புப் பொருள் எழுதுவினைஞருக்கு அவற்றை திருப்பியனுப்புதல் ;

(ஊ) விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் படவரைதலுக்காக 1கி இனை விஞ்சாத நிறையினையுடைய அத்தகைய காண்பி பொருட்களின் மாதிரியைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுமதியளித்தல் ; அத்துடன்

(எ) பொருத்தமான கையுதிர்த்தல் கொள்கலன்களுக்கு காண்பி பொருளை கைமாற்றுதல் மற்றும் இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளையுடன் இசைந்தொழுகுகின்றவகையில் கையுதிர்த்தலுக்கான தயாரிப்புகளில் அதே இலச்சினையை இடுதலும்.

9. (1) நீதிமன்றத்தின் கட்டளையினைப் பின்பற்றி விடயத்துக்கேற்ப, காண்பி பொருளின் அழிப்பு அல்லது வெளிவிடுதல் மீது, பொலிசுப் போதைப் பொருள் பணியகம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் இயைபான நீதிமன்றத்திற்கு விடயத்துக்கேற்ப, அழித்தல் அல்லது வெளிவிடுதலுக்கான சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அழித்தல் அல்லது வெளிவிடுதல் பற்றிய சான்றிதழானது, விடயத்துக்கேற்ப, தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான பிரதிகள் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அழித்தல் அல்லது வெளிவிடுதலில் சமுகமளித்துள்ள எல்லா திறத்தவர்களினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகைய சான்றிதழின் மூலப்பிரதியானது, இயைபான நீதிமன்றத்தினால் கோப்பிடப்படுதல் வேண்டும் ; அத்துடன் -

(அ) காண்பி பொருட்களை அகற்றும் சந்தர்ப்பத்தில், அத்தகைய சான்றிதழின் எஞ்சிய எண்ணிக்கையினதான பிரதிகளானவை பொலிசுப் போதைப்பொருள் பணியகத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு, விடயத்துக்கேற்ப தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் அரசாங்க பகுப்பாய்வாளர்கள் திணைக்களத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் காண்பி பொருளை வெளிவிடும் சந்தர்ப்பத்தில், அத்தகைய சான்றிதழின் பிரதியொன்று வெளிவிடப்பட்ட போதைப் பொருள் அவுடதங்கள், மனநல மருத்துவ மூலப்பொருட்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பதார்த்தங்களைச் சேகரிப்பதற்கு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியானவர், ஏதேனும் காண்பி பொருளை அரசாங்க பகுப்பாய்வாளர் பரீட்சித்ததன் பின்னர் விரைவானளவு அத்தகைய காண்பி பொருளின் கையுதிர்த்தலின் சாத்தியத்தன்மை பற்றி கருதுதல் வேண்டும்.

ஆயின், இயைபான விசாரணை முடிவடையும் வரை, அத்தகைய காண்பி பொருளை பேணிக்காப்பதற்கு குறிப்பான தேவைப்பாடொன்றிருப்பின், அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகள் காரணமாக விசாரணை முடிவடையும் வரையில் காண்பி பொருளை பேணிக்காப்பதற்கு நீதிமன்றம் முடிபுசெய்திருப்பின், நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியானவர், அத்தகைய தேவைப்பாட்டினை அல்லது சூழ்நிலைகளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளின் வினைத்திறனான மற்றும் வினைத்திறனான ஒருங்கிணைப்புக்காக, இயைபான நீதிமன்றம், பொலிசுப் போதைப் பொருள் பணியகம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் மற்றும் தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது -

(அ) இவ்வொழுங்குவிதிகள் முகவரியிடப்பட வேண்டியதுடன் தொடர்புடைய எல்லா தொடர்பாடலுக்குமான மையப்புள்ளியொன்றினை நியமித்தல் வேண்டும் ;

(ஆ) தொடர்பாடலைப் பேணுதலும் பின்தொடர்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) விசேடத்துவம்பெற்ற அரசாங்க மின்னஞ்சல் முகவரி அல்லது பாதுகாப்பான மின்னஞ்சல் முகவரியினை தொடர்பாடலுக்காகப் பயன்படுத்துதல் வேண்டும்.

12. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக -

"தகுதிவாய்ந்த நீதிமன்றம்" என்பது, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் V இன் கீழ் புரியப்பட்ட தவறொன்றினை விசாரணை செய்வதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிமன்றம் எனப் பொருள்படும் ;

"கையுதிர்த்தல் பகுதி" என்பது, நீதிமன்ற காண்பி பொருட்கள் அழிக்கப்படக்கூடியதாகவிருக்கின்ற நீதிமன்ற வளாகம், விவசாய நிலமொன்று, மயானபூமி அல்லது அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் எரிப்பதற்கான வசதியுள்ள இடம் எனப் பொருள்படும் ;

"தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை" என்பது, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை எனப் பொருள்படும் ; அத்துடன்

"கட்டளைச் சட்டம்" என்பது, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

ஒழுங்குவிதி 4

## முதலாம் அட்டவணை

## கையுதிர்த்தலுக்கான குறித்துரைப்புக்கள்

***மோர்பின்/ஹெரோயின்/கொக்கெய்ன்***

| கையுதிர்த்தல் நிறை | முறைமை |
|---|---|
| 1000 கிராம்களுக்குக் குறைவானவை | 1. உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |
| | 2. உயர் வெப்பத்தில் தகனச்சாலையொன்றில் எரித்தல் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800°) |
| | 3. கொதிநீரில் கரைத்து பொருத்தமான அகற்றல் முறைமை ஒன்றில் கழுவிவிடல் |
| 1000 கிராம்களுக்குக் அதிகமானவை | உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |

குறிப்பு :

- முன்கூட்டிய செயற்பாடு - படிவுப் பொருட்கள் இல்லாமலாகும் வரையில், உலோக அல்லது பிளாஸ்டிக் பெரல் அல்லது பீப்பாய் ஒன்றில் இட்டு சுடுநீரில் போதைப்பொருளை நன்கு கரைத்து கலவை செய்தல் வேண்டும்.
- கலவை செய்த கரைசலை வெளியேற்றும் முறைக்கு மாற்றியதன் பின்னர், அதனை உயர் அமுத்த நீரினால் கழுவிவிடுதல் வேண்டும்.
- எஞ்சியுள்ள பகுதியை பெரல் அல்லது பீப்பாய் ஒன்றில் இட்டு சுடுநீரில் கரைத்து கலவை செய்யும் பணியை மீண்டும் மீண்டும் செய்தல் வேண்டும்.

***மெதம்பெடமின்***

| கையுதிர்த்தல் நிறை | முறைமை |
|---|---|
| 1000 கிராம்களுக்குக் குறைவானவை | 1. உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |
| | 2. உயர் வெப்பத்தில் தகனச்சாலையொன்றில் எரித்தல் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800°) |
| 1000 கிராம்களுக்குக் அதிகமானவை | உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |

குறிப்பு :

- முன்கூட்டிய செயற்பாடு - உலோக அல்லது பிளாஸ்டிக் பெரல் ஒன்றில் சாதாரண நீருடன் போதைப்பொருளின் படிவுப் பொருட்கள் இல்லாமலாகும் வரையில் நன்கு கரைத்து கலவை செய்தல் வேண்டும்.

- குறித்த பகுதியில் அதியுச்ச பாதுகாப்பு உடைகள் அணியுமாறு விதந்துரைக்கப்படுகின்றது.

***கஞ்சா***

| கையுதிர்த்தல் நிறை | முறைமை |
|---|---|
| ஏற்புடையதன்று | 1. உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |
| | 2. வெற்று வெளியில் எரித்தல் |

குறிப்பு :

- உலோக பெரல் (200 லீட்டர்) அல்லது திறந்த குழிகள் அல்லது ஆழிகள் (சதுர மீட்டர் 12 இற்கு குறையாத) போதைப் பொருளை எரிப்பதற்காகப் பயன்படுத்தவும்.

- அனைத்து நபர்களையும் புகையுள்ள பிரதேசத்தில் இருந்து அகற்றி விடவும்.

    - நீண்டகால சுற்றாடல் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு நாளொன்றுக்கு ஆகக்கூடிய நிறையாக 100 கிலோ கிராமிற்கு வரையறுத்தல்

    - எரிப்பதற்கு முன்னர், முன் எரிப்பு இடம்பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக வேறு கையுதிர்த்தல் பொருட்கள் (உதாரணம் :- காட்போர்ட், உலர்ந்த உணவு கழிவுப் பொருட்கள், மரக்கறி எண்ணெய் அல்லது கிரீஸ்) சம அளவில் (1:1 விகிதத்தில்) அரைத்தல் அல்லது கலத்தல் என்பன விதந்துரைக்கப்படுகின்றது.

    - எரிக்கும் இடத்தை தேர்ந்தெடுக்கும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்ளவும் :

        - மனித வசிப்பிடங்கள், நீர் வழிகள், கிணறுகள், மின்சாரக் கம்பங்கள், காடுகள் மற்றும் உணவு பயிரிடும்/ உற்பத்தி செய்யும்/பரிமாற்றுப் பிரதேசங்களிலிருந்து ஆகக்குறைந்தது 500 மீற்றர் தூரத்திலிருத்தல்.

        - நீர் வழிகள் மற்றும் கடினமான மணலிலிருந்து அகன்ற உயர்ந்த மற்றும் தட்டையான நிலப்பிரதேசம்.

***ஏனைய செயற்கை அல்லது அரை செயற்கை அவுடதங்கள்***

| கையுதிர்த்தல் நிறை | முறைமை |
|---|---|
| அதிகபட்சம் : ஒரு மணித்தியாலத்திற்கு 50 கிலோ கிராம் | உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |

***ஏனைய தாவர அடிப்படையிலான அவுடதங்கள்***

| கையுதிர்த்தல் நிறை | முறைமை |
|---|---|
| ஏற்புடையதன்று | 1. உயர் வெப்பத்தில் (ஆகக் குறைந்த செல்சியஸ் 800° - அதியுச்சமாக 1100°) எரித்தல் |
| | 2. வெற்று வெளியில் எரித்தல் |

குறிப்பு :

- உலோக பெரல் (200 லீட்டர்) அல்லது திறந்த குழிகள் அல்லது ஆழிகள் (சதுர மீட்டர் 12 இற்கு குறையாத) போதைப் பொருளை எரிப்பதற்காகப் பயன்படுத்தவும்.

- அனைத்து ஆளணியினரையும் புகையுள்ள பிரதேசத்தில் இருந்து அகற்றி விடவும்.
  - நீண்டகால சுற்றாடல் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு நாளொன்றுக்கு ஆகக்கூடிய நிறையாக 100 கிலோ கிராமிற்கு வரையறுத்தல்
  - எரிப்பதற்கு முன்னர், முன் எரிப்பு இடம்பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக வேறு கையுதிர்த்தல் பொருட்கள் (உதாரணம் :- காட்போர்ட், உலர்ந்த உணவு கழிவுப் பொருட்கள், மரக்கறி எண்ணெய் அல்லது கிரீஸ்) சம அளவில் (1:1 விகிதத்தில்) அரைத்தல் அல்லது கலத்தல் என்பன விதந்துரைக்கப்படுகின்றது.
  - எரிக்கும் இடத்தை தேர்ந்தெடுக்கும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்ளவும் :
    - மனித வசிப்பிடங்கள், நீர் வழிகள், கிணறுகள், மின்சாரக் கம்பங்கள், காடுகள் மற்றும் உணவு பயிரிடும்/ உற்பத்தி செய்யும்/பரிமாற்றுப் பிரதேசங்களிலிருந்து ஆகக்குறைந்தது 500 மீற்றர் தூரத்திலிருத்தல்.
    - நீர் வழிகள் மற்றும் கடினமான மணலிலிருந்து அகன்ற உயர்ந்த மற்றும் தட்டையான நிலப்பிரதேசம்.

**இரண்டாம் அட்டவணை**

ஒழுங்குவிதி 9

அழித்தல்/வெளிவிடுதல் சான்றிதழ் :

பின்வரும் போதைப் பொருள், மனநல மருத்துவப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடான பதார்த்தங்கள் என்பன அழிக்கப்பட்ட அல்லது வெளிவிடப்பட்டவையாக சான்றுப்படுத்தப்படுகின்றது.

1. வழக்கு இல. :
2. போதைப்பொருள், மனநல மருத்துவப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடான பதார்த்தங்கள் :
3. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதைப்பொருட்களின் நிகர எடை :
4. அழிக்கப்பட்ட/வெளிவிடப்பட்ட போதைப்பொருள், மனநல மருத்துவப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடான பதார்த்தங்களின் நிகர எடை (மாதிரிகளைப் பெற்றதன் பின்னர்) :
5. விபரத்தின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது : ஆம்/இல்லை
6. கையுதிர்த்தல்/வெளிவிடுதல் பிரதேசம் :
7. கையுதிர்த்தல்/வெளிவிடுதல் முறைமை :
8. திகதி :
9. ஆரம்பிக்கப்படும் நேரம் :
10. முடிவுறும் நேரம் :

நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் விபரங்கள் :

கையொப்பம் :
பெயர் :
பதவி :

மேற்கூறப்பட்ட போதைப்பொருள்/ மனநல மருத்துவப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடான பதார்த்தங்களின் கையுதிர்த்தல்/ வெளிவிடுகையானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தில் கையுதிர்க்கப்பட்டுள்ளமை/வெளிவிடப்பட்டுள்ளமைக்கான சாட்சியின் பொருட்டு :

1. மேற்பார்வை செய்யும் இயைபான நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியின் கையொப்பமும் பெயரும் :
2. அரசாங்க பகுப்பாய்வாளர் அல்லது அவருடைய பிரதிநிதியின் கையொப்பம் (கையொப்பங்கள்) மற்றும் பெயர் (பெயர்கள்) :
3. தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதிநிதிகளின் கையொப்பம் (கையொப்பங்கள்) மற்றும் பெயர் (பெயர்கள்) :
4. அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் கையொப்பம் (கையொப்பங்கள்) மற்றும் பெயர் (பெயர்கள்) :
5. வெளிவிடப்படுமிடத்து, வெளிவிடப்பட்ட போதைப்பொருள், மனநல மருத்துவப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடான பதார்த்தங்களைத் திரட்டிய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம் (கையொப்பங்கள்) மற்றும் பெயர் (பெயர்கள்) :

EOG 11-0316

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.